## 2. நடைமுறைக் கேள்வி

மூல வினாவில் ஒரு பகுதி நீக்கப்படடு அனுமதிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : On a of point order, Sir. In the original question that was sent by post to me, this supplementary also was included. Actually it has come from the department. But surprisingly in today's list containing questions, this supplementary has not been included. So I had to put the supplementary with your permission and the Hon. Minister was good enough to answer. Otherwise I would have again to put a fresh question for that supplementary and wait for six months to get the answer. In the original question which I had sent, this supplementary was included and subsequently I find it had been deleted, after it has been allowed by the Hon. Speaker.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் கேட்க உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்தக் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டுமென்று அமைச்சர்களைக் கட்டாயப்படுத்த விதியில் இடமில்லை.

DR. H. V. HANDE : I am not denying that. The Hon. Minister can answer or withhold answer. What I say is, according to the reply I got from the department.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த டிபார்ட்மென்ட் ?

DR. H. V. HANDE : Hon. Speaker's department. That supplementary had been allowed. But subsequently it has been omitted when the original question containing this supplementary had been allowed by the Hon. Speaker. I had no idea that it would be deleted later. That is why I raise the point of order and I request you Sir, to give your ruling.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் தங்கள் வினாவில் உட்பிரிவுகள் (ஏ) (பி) யை மட்டுந்தான் அனுமதித்திருக்கிறார்கள். உட்பிரிவு (சி)-யை அனுமதிக்கவில்லை. உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிற நேரத்தில் அந்தத் தகவல் தெரிவிக்கப்படாமல் இருக்கிறது. அது பற்றி நான் ஆராய்ந்து பார்க்கிறேன்.

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

### தலைஞாயிறுப்பகுதி மானாவாரி நிலங்களுக்குப் பாசன வசதி

***409 வினா.—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூகா தலைஞாயிறு பகுதியில் வாட்டாகுடி, ஓரணி அம்பலம் ஆகிய கிராமங்களில் 1,000 ஏக்கருக்கு குறையாத அளவு விளை நிலங்களில் பெரும்பாலும் தேங்கியுள்ள தண்ணீரை அதற்கு மேல் உள்ள 250 ஏக்கருக்கு குறையாத அளவுள்ள மானாவாரி நிலங்களுக்கு பம்பு வாயிலாக பாய்ச்சிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வடுகூர், ஆய்மூர், தலைஞாயிறு (5-வது சேத்தி), காடாத்திருத்தி முதலிய கிராமங்களில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவும், மேற்குறிப்பிட்ட வடிகால் நீரை விசையேற்றம் மூலம் இறைத்து தலைஞாயிறு

I, III, IV சேத்தி கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டாகுடி, ஓரணி அம்பலம் சிற்றூர்கள், இச்செயற் குறிப்பில் அடங்குகின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தயாரிக்கப்பட்ட திட்டம் எப்போது அமலுக்கு வரும்? அதைத் துரிதமாக அமல்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சை மாவட்ட தலைவர் ஏற்றுக்கொண்டு இத்திட்டம் குறித்த வருவாய் துறை வாரியத்தின் அறிக்கை கிடைத்த பின் அரசாங்கம் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

### திருப்பூர் நகரைச்சுற்றி வட்டசாலை

*410 வினா —திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரைச்சுற்றி வட்ட வடிவமான ரோடு அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது குறித்து செயற் குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரில் நொய்யல் நதியைக் கடக்க குறுக்கே பாலம் இருக்கிறது. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்து போகிற வண்டிகளின் பாதை நகரத்தின் மத்தியில் இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன ஆகவே, வட்ட வடிவமான பாதை இருந்தால் நகரத்திற்குள் வருகிற லாரிகள். பஸ்கள் போன்றவற்றின் போக்குவரத்து வசதி சௌகரியமாக இருக்கும், ஆகவே திருப்பூர் நகரத்தில் அப்படி ஒரு ரோடை அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்கு அப்படி ஒரு புற வழிச் சாலை அமைக்க செயற்குறிப்பு இல்லை. அதை நான்காவது திட்டத்தில் மேற்கொள்ள குறிக்கோள் இல்லை.

THIRU K. VINAYAKAM : Even though this question applies to the town of Tiruppur, this is a problem concerning every town in the State of Madras. May I know whether the Government is thinking of launching upon a wider programme of constructing this kind of round roads in places where there is this kind of traffic congestion?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரங்களை தெரிவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]